மதுரை மாநகராட்சி சார்பாக அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் மதுரை கிழக்கு, திருப்பரங்குன்றம், மதுரை வடக்கு மற்றும் மதுரை தெற்கு ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் புதிய பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தலைமையில் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, நகராட்சி நிர்வாகத்துறை இயக்குனர் சிவராசு, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, ஆ.வெங்கடேசன்,மு.பூமிநாதன், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழகத்தினர், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.

அரசுப் பணிகளில் விளையாட்டு வீரர்களுக்கு

3 சதவிகித வேலைவாய்ப்பு வழங்கிய முதல்வருக்கு நன்றி!

பேரவையில் ஏ.பி.நந்தகுமார் பேச்சு!

சென்னை, ஜன. 11 -

அரசுப் பணிகளில் விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித வேலைவாய்ப்பு வழங்கிய முதல்வருக்கு நன்றி என்றும், அணைக்கட்டு தொகுதியில் மேலரசம்பட்டு அணை கட்ட வேண்டும் என்றும் சட்டப்பேரவையில், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய, அணைக்கட்டு தொகுதி கழக உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் குறிப்பிட்டார்.

அவரது பேச்சு வருமாறு:-

முதலில் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தமிழ்நாட்டினுடைய தன்னிகரில்லா தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவை முன்னவர், நீர்வளத் துறை அமைச்சர், அவர்களுக்கும், வருங்கால தமிழகத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரம் தமிழ்நாட்டினுடைய துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர், கொறடா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஒரு கோடியே 15 இலட்சம் குடும்பங்கள், மகளிர்களுக்கு ரூபாய் ஆயிரம் தந்து அழகு பார்க்கின்ற அரசு இந்த அரசு, இன்றைக்கு காலையில் பேசிய நம்முடைய தமிழ்நாட்டினுடைய துணை முதலமைச்சர் அவர்கள் ஒரு கோடியே 15 இலட்சம் பேருக்கு மகளிர் உரிமைத் தொகை தருகின்றோம். காலையிலே உறுப்பினர் கேட்ட கேள்விக்கு மீதம் இருக்கக்கூடிய தாய்மார்களுக்கும் மூன்றுமாத காலத்திலே அந்த உரிமைத் தொகை கிடைக்கும் என்று இங்கே அறிவித்தார்கள். உள்ளபடியே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலே அவருக்கு என்னுடைய நெஞ் சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். காரணம் நாற்பதுக்கு நாற்பது வெற்றியைத் தந்தது தமிழ்நாட்டினுடைய தாய்க்குலங்கள். அந்த ஆயி ரம் ரூபாய். இப்போது தலைவர்-முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 200 தொகுதிகள் என்று. மீதம் இருக்கக்கூடிய மகளிர்களுக்கும் அந்த ஆயிரம் ரூபாய் தந்தால் வரக்கூடிய 2026 சட்டமன்ற தேர்தலிலே, சட்டமன்றத் தேர்தலிலே, கண்டிப்பாக 234 தொகுதி களிலும் நாம் வெல்வது உறுதி.

தலைவர் தளபதியார் அவர்களுடைய மகளிர் விடியல் பயணத் திட்டம். மகளிருக்கென்று பல திட்டங்களைத் தந்திருக்கக்கூடியதலைவர் முதலமைச்சர் அவர்கள். நான் பல நேர்வுகளில் தொகுதியிலுள்ள பல இடங்களுக்குச் செல்கின்ற போது, அங்கிருக்கக்கூடிய தாய்மார்கள் தலைவர் தளபதி அவர்களின் அரசை வெகுவாகப் பாராட்டுகிறார்கள். என் தொகுதியிலுள்ள ஒடுகத்தூர் பகுதியிலிருந்து வேலூருக்கு வர வேண்டுமென்றால், ஒருவருக்கான பேருந்து கட்டணம் ரூ.25/-. தாய்மார்கள் வேலைக்காக வேலூர் செல்கிறார்கள் என்றால், அவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.10,000/- அல்லது ரூ.11,000/- சம்பளம் கிடைக்கிறது. இத்திட்டத்தின் பயனாக, வேலைக்குச் சென்று வருவதற்கு ஆகும் பயணக் கட்டணமான ரூ.1,250/- ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு சேமிப்பு ஏற்படுகிறது. இந்தத் திட்டத்தைத் தந்த தலைவர் தளபதி அவர்களுடைய அரசு. என்றைக்கும் மகளிர் பக்கம் இருக்கின்றது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாக இருந்துகொண்டிருக்கிறது.

முத்தான திட்டங்களில் ஒன்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்திட்ட முத்தான திட்டம். கிராமப்புறங்களில் விவசாயம் மற்றும் கூலி வேலை செய்யக்கூடிய தாய்மார்களால் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு தினமும் காலை உணவு சூடாக வழங்க முடியவில்லை. இதனால், குழந்தைகள் சுறுசுறுப்பின்றி காணப்பட்டார்கள். எனவே, மாநிலம் முழுவதும் 34,987 தொடக்கப் பள்ளிகளில் 17.53 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம் தந்து. மக்கள் பாராட்டக்கூடிய வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய தலைவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

செஸ் ஒலிம்பியாட் விளையாட்டுத் துறையின் சார்பில் 200-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை சிறப்பாக நடத்திக் காட்டியவர் துணை முதலமைச்சர் அவர்கள். செஸ் போட்டிகள் நடத்தி பாராட்டு பெற்ற தமிழ்நாடு அரசு, தற்போது உலகமே பாராட்டக்கூடிய வகையில், தமிழ்நாட்டு மாணவன் குகேஷ், உலக செஸ் சாம்பியனாக வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு 5 கோடி ரூபாய் பரிசுத் தொகை தந்து கௌரவப்படுத்திய அரசு தலைவர் தளபதி அவர்களின் அரசு.

விளையாட்டுத் துறை சார்பில் வேலூரில் குத்து ச்சண்டை போட்டி நடைபெற்றது. அந்தப் போட்டியில் சிறப்பு விருந்தினராக நான் கலந்துகொண்டேன். பார்வையாளராக நான் சென்றபோது, தமிழ்நாடு அளவில் அந்தப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்கள், அரசுப் பணிகளில் விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித வேலைவாய்ப்பினை வழங்கிய தலைவர் தளபதி அவர்களின் அரசுக்கு நன்றி சொல்ல வேண்டுமென்று என்னிடத்தில் சொன்னார்கள். இவ்வாறு விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி, பல ஏழை மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை தந்த அரசு, தலைவர் தளபதி அவர்களின் அரசு.

குறிப்பாக, வெயிலூர் என்று சொல்லக்கூடிய எங்கள் வேலூர் மாவட்டத்தில், இதுவரை பல ஆறுகளில் எங்கேயும் தடுப்பணை கட்டியது கிடையாது. குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது, பாலாற்றில் தண்ணீர் வந்தாலும் கிடையாது. ஆனால், தற்போது 10 இடங்களில் தடுப்பணைகளைக் கட்டித் தந்தது இந்த அரசு மற்றும் அவையின் முன்வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். தலைவர் - முதல்வர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த 3½, 4 ஆண்டுகளாக பாலாற்றில் தண்ணீர் ஓடுவதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அவருக்கு பக்கத்திலேயே அமர்ந்திருக்கக்கூடியவர் அமைச்சர் கே.என். நேரு அவர்கள். எங்களுடைய வேலூர் மாநகராட்சி மற்றும் 3 பேரூராட்சிகள் இருக்கின்றன. அந்த 3 பேரூராட்சிகள் மற்றும் வேலூர் மாநகராட்சிக்கு அதிக நிதியை ஒதுக்கித் தந்தவர். நேற்றைய தினம் கூட, ஒரு கோரிக்கை நிமித்தம் வனத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தேன்.

மேலாசம்பட்டு அணை!

இந்த அரசில் உடனடியாக கோரிக்கைகளை நிறைவேற்றித் தரக்கூடியவர் அவர். என்னுடைய அணைக்கட்டு தொகுதியில் மேலரசம்பட்டு அணை கட்ட வேண்டும். அதற்கு அவருடைய துறையின் சார்பில் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவரும் செய்து தருவதாகச் சொன்னார். குறிப்பாக, உள்ளாட்சித் துறையில் பல சாலைகளுக்கு நிதி ஒதுக்கித் தந்தவர் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். அணைக்கட்டு தொகுதி பின்தங்கிய ஒரு தொகுதியாகும்.

ஆனால், ஒவ்வொரு பட்ஜெட்டிலும் முதல்வர் அவர்களின் மகத்தான அறிவிப்புகளால் பூரித்துப்போகும் காலமிது. சொன்னதைச் செய்யும், சொல்லாததையும் செய்யும் திராவிட மாடல் ஆட்சி. ஆயிரம் கரங்களால் அள்ளித் தரும் ஆட்சி. ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு கிள்ளிக்கூடத் தரவில்லை, ஆனாலும் இந்த அரசு அசந்ததில்லை. இந்த அரசைவிட இந்தியாவில் உசந்த அரசும் ஏதுமில்லை.

நனவாகும் கல்விக் கனவுகள்!

ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு திருமணம் செய்யலாம் என்பார்கள். ஆனால், முதல்வர் அவர்களின் கருணையால் மாதம் ஆயிரம் ரூபாயால் கல்விக் கனவுகள் நனவாகின்றன. இந்த ஆட்சியில் பலன் பெறாதவர்கள் யாரும் இல்லை.

கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைகூட நம்மைப் பாதுகாக்க ஒரு முதல்வர் இருக்கிறார் என்ற நம்பிக்கையில் அழுது கொண்டு பிறப்பதில்லை. சிரித்துக்கொண்டே பிறக்கின்றன. சென்னையில் வெள்ளம் வந்தால்கூட வந்த வேகத்தில் வடிந்துவிடுகிறது. புயல் வந்தால்கூட முதல்வர் அவர்களுக்கு ஒரு வணக்கம் சொல்லிவிட்டுச் சென்றுவிடுகின்றது. இதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எதிர்ப்புகளை எருவாக்கி, அவதூறுகளை அடியுரமாக்கி வளர்ந்த இயக்கம். இந்த ஆட்சியை யாரும் தொட்டுப்பார்க்க முடியாது. வயிற்றெரிச்சல் காரர்களின் வம்புகளை அம்புகளாக்கி, அவர்களை நோக்கி திருப்பிவிடும் ஆற்றல் எம் தலைவருக்கு உண்டு. இந்த ஆட்சியின் சாதனைகளை உச்சரிக்கக் கூட மனமில்லாதவர்கள் வெளிநடப்பு செய்யக்கூடும். ஆனால், தமிழ்நாட்டில் உள்ள ஆண், பெண்/மாணவ, மாணவியர் என எல்லா உதடுகளும் இந்த ஆட்சியின் சாதனையை அன்றாடம் உச்சரிக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள் வான்புகழ் கொண்ட வள்ளுவருக்கு வானளவு சிலை வைத்தார். அவர் பெற்ற புதல்வர் வெள்ளி விழா கண்டார். அந்தச் சிலைக்கு பொன்விழா வரும்போதும் தலைவர் தளபதி அவர்களுடைய ஆட்சி என்றைக்கும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மருத்துவர் திலீப் ராஜகண்ணப்பன் மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் ஏற்பாட்டில் கடந்த மாதம் முதுகுளத்தூரில் நடைபெற்ற மருத்துவ முகாமில் கலந்து கொண்ட கொழுந்துறை ஒன்றிய கவுன்சிலுக்கு உட்பட்ட நெடிய மாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த கருப்பையா என்ற பயனாளிக்கு இலவசமாக காது கேட்கும் கருவி நேற்று வழங்கப்பட்டது.

பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம்: ஜன.11ந் தேதிக்குள்

தமிழ்நாடு முழுவதும் 67 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, ஜன. 13-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்கி வைக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 11.01.2025 வரை 67 சதவீதம் நிறைவுபெற்றுள்ளது - என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது

"தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாகப் பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் அறுவடைத் திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர்தம் மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. 2025-ஆம் ஆண்டு தைப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்குத் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும்" எனவும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டி-சேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என அறிவித்தார்கள்.

அதன்படி, கடந்த 09.01.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சின்னமலை வேளச்சேரி பிரதான சாலையில் இயங்கிவரும் சைதாப்பேட்டை-11 நியாயவிலைக் கடையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரிசிபெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 34,793 நியாயவிலைக்கடைகளில் 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி, 11.01.2025 வரை தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 47 லட்சத்து 07 ஆயிரத்து 584 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 67 சதவீதம் பணிகள் நிறைவுபெற்றுள்ளது. மீதமுள்ள பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்கள்.

ராமலிங்கம் தொடர்புடைய 28 இடங்களில் வருமான வரித்துறையினர் சோதனை

எடப்பாடி பழனிசாமியின் உறவினர் ரூ.700 கோடி வரி ஏய்ப்பு!

கணக்கில் வராத ரூ.10 கோடி பறிமுதல்!

ஈரோடு, ஜன. 13 -

எடப்பாடி பழனிசாமியின் உறவினர் ராமலிங்கம் தொடர்புடைய இடங்களில் நடந்த சோதனையில் 700 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

ஈரோடு மாவட்டம் செட்டிபாளையத்தை தலைமையிடமாக கொண்டு, என்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் பிரவேட் லிமிடெட் என்ற பெயரில் தனியார் கட்டுமான நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் என்.ராமலிங்கம் என்பவருக்கு சொந்தமானது. இவர் எடப்பாடி பழனிசாமியின் நெருங்கிய உறவினராவார்.

இந்நிறுவனத்திற்கு சென்னை உட்பட மாநில முழுவதும் மற்றும் கர்நாடகா மாநிலம் பெங்களூரு என வெளிமாநிலங்களிலும் கிளை அலுவலகம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் கடந்த 2022-23 மற்றும் 2023-24ம் நிதியாண்டில் தனது வருமானத்தை பெரிய அளவில் குறைத்து கணக்கு காட்டியதாக கூறப்படுகிறது. ஆனால் இந்த நிறுவனம் கட்டுமான பணிகள் மூலம் பல கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

இதையடுத்து 50க்கும் மேற்பட்ட வருமான வரித் துறை அதிகாரிகள் செட்டிபாளையத்தில் உள்ள என். ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தின் தலைமை அலுவலகம், சென்னை, பெங்களூரு உள்ளிட்ட இடங்களில் உள்ள அதன் கிளை நிறுவனங்கள், ராமலிங்கம் மற்றும் அவரது மகன்களின் வீடுகள் என 28 இடங்களில் சோதனை நடத்தினர்.

5 நாட்கள் நடைபெற்ற இந்த சோதனைகளில் கணக்கில் வராத 10 கோடி ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டதாக வருமான வரித்துறை தெரிவித்துள்ளது. மேலும், இந்த சோதனைகளில் 700 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் வருமான வரித்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யு.ஜி.சி. புதிய விதிகளை திரும்பப் பெற வலியுறுத்தி

முதல்வர் கொண்டு வந்த தனித்தீர்மானத்திற்கு வரவேற்பு!

ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் அதியமான் அறிக்கை!

சென்னை, ஜன. 13-

ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் அதியமான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கல்வி உரிமையையும் சமூகநீதியையும் அழிக்க நினைக்கின்ற வகையில் யு.ஜி.சியின் வரைவு விதிமுறையை அறிவித்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இந்த U.G.C விதிமுறையை நாம் ஏற்பதற்கில்லை என்பதோடு ஒன்றிய அரசு இதை திரும்ப பெற வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை ஆதரிப்பதோடு ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது.

தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பு என்பது மிகவும் வலுவான ஒன்றாக திகழ்கிறது, இதற்காக நமது முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி ஒரு நீண்ட நெடிய இலக்கத்தை நிர்ணயித்திருக்கிறது நமது திராவிட மாடல் அரசு.

பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது அபார வளர்ச்சி பெற்றுள்ள தமிழ்நாட்டின் கல்லூரி கல்வி வளர்ச்சிக்கு இவ் விதிகள் கடிவாளம் போடும் விதமாகவும் ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்கள்.

பல்கலைகழங்களில் முற்போக்கும் அறிவியல் மனப்பான்மை கொண்ட துணைவேந்தர்களை தேர்வு செய்வதையும் சமூக நீதியையும் தவிர்ப்பதற்காக மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் ஆளுநர்களே நேரடியாக நியமித்துக் கொள்ளலாம் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது துறை அறிவிப்பில் தெரிவித்திருக்கிறார்.

அதேபோல் ஆளுநரின் பதவிக் காலம் மூன்றாண்டுகளில் இருந்து ஐந்து தாண்டுக்கு நீட்டிப்பு செய்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசை முடக்கவும் நினைக்கிறார்கள்.

ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யாமல் பல்கலைகழகங்களை முடக்கும் ஒன்றிய அரசு மாணவர்களின் உயர்கல்வியை சிதைக்க முயல்வதோடு ஆளுநர் அரசியல் செய்ய வழி வகையையும் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார்கள்.

உயர்கல்வி தொடர்பான இது போன்ற U.G.C விதியானது அரசியலமைப்பு சட்டத்தின் ஒன்றிய பட்டியலில் இல்லை. பொதுப்பட்டியலில் தான் இருக்கிறது. பொதுப்பட்டியலில் இருக்கும் ஒரு சட்டத்தில் தன்னிச்சையாக பாசக அரசு முடிவெடுப்பது ஏதேச்சதிகாரமானது இது மாநில அரசுகளை மட்டுமல்ல கல்வியையே சிதைக்கின்ற நடவடிக்கை ஆகும்.

ஆதலால் ஆளுநரின் அதிகாரங்கள் பறிக்கப்பட வேண்டும், என்பதோடு ஒன்றிய அரசின் U.G.C வரைவு விதிகளை திரும்ப பெற வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் கொண்டு வந்த தனித்தீர்மானத்தை ஆதரிப்பதோடு ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கலைஞரின் புத்தக வெளியீட்டு விழா

பாரதி நிலையம் சார்பில்
கலைஞரின் குறளோவியம்
வெளியீடு! சென்னை நந்தனம்
ஓய்.எம்.சி.ஏ. புத்தகக் கண்காட்சி
வெளியிட்டவர்
திரு. நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள்
முதல் பிரதி பெற்றவர்:
திரு. கே.லோகநாதன் அவர்கள் (கல்வியாளர்)
12.01.2025 ஞாயிறு காலை 11:00 மணி
அளவில் அரங்க எண் 156 / 157–ல்
நடைபெற்றது.

புத்தகம் பெற ₹550 வங்கி கணக்கில் செலுந்தவும்.

Union Bank of India
West Mambalam Branch,
Chennai -600033
Bharathe Nilayam,
A/C NO:611701010050744
IFSC CODE:UBIN0561177
Cell GPAY: 9345087356

முன்பதிவு செய்பவர்களின்
பெயர் .....
முகவரி .....
.....
செல் நம்பர்.....
தெளிவாக குறிப்பிடவும்